# இலங்கைக்கு ஆயுதம் விற்க பிரான்ஸ் தடைவிதிப்பு?

புருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 7 இதழ் 315
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22 — 12 — 1992

(கொழும்பு)
இலங்கைக்கு இராணுவ தளபாடங்களை விற்பதற்கு பிரான்ஸ் அரசு தடைவிதித்துள்ளதாக பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.
ஆர்ஜன்ரீனா விடமிருந்து 'புகாரா' விமானக் கொள்வனவு தொடர்பாக எழுந்த சர்ச்சையின் போதே பிரதமர் நாடாளுமன்றில் இதனை தெரிவித்துள்ளார்.
இதேவேளை இது குறித்து கொழும்பிலுள்ள பிரெஞ்சு தூதரகத்துடன் தொடர்பு கொண்டபோது, இவ்வாறான

[4ம் பக்கம் பார்க்க]

## ரஷ்ய ஆயுதங்களை இலங்கை வாங்கும்

(கொழும்பு)
இலங்கை அரசு இனிவரும் காலத்தில் ரஷ்யாவிடமிருந்தும், கிழக்கு ஐரோப்பியநாடுகளிடமிருந்தும பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
ரஷ்யா இலங்கைக்கான ஆயுத விநியோகத்திற்குப் பச்சைக் கொடி காட்டியதை அடுத்து, ரஷ்யாவிடமிருந்து அடுத்த வருட முற்பகுதியில் புதிதாக 'எம்.ஐ-8' ரக நவீன ஹெலிகொப்டர்கள் பல

[4ம் பக்கம் பார்க்க]

★ யுத்த நிறுத்தம் ★ பேச்சுவார்த்தை

# லண்டன், பாரிஸில் புலிகளுடன் சமரசப் பேச்சுக்கு தீவிர முயற்சி!

## அமைச்சர் ஹமீத், தமிழ் அரசியல்வாதி பயணம்

(கொழும்பு)
இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து, அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளை அரசு ஆரம்பித்துள்ளதாகவும், இதற்கேற்ப புலிகளைச் சந்திப்பதற்காக அமைச்சர் ஹமீத் பாரிஸிற்கும், ஐ. தே. க.வின் முக்கிய தமிழ் அரசியல்வாதி ஒருவர் லண்டனுக்கும் சென்றுள்ளதாக நம்பத் தகுந்த கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்துப் புலிகளின் நிலைப்பாட்டை அறிவதற்காக அமைச்சர் ஹமீத் கடந்த வியாழக்கிழமை பாரிஸ் சென்றுள்ளாராம். அவர் அங்கு புலிகளின் முக்கியஸ்தர்களான லோறன்ஸ் திலகர் மற்றும் பிரமுகர்களுடன் பேசி

[4-ம் பக்கம் பார்க்க]

## கிறிஸ்மஸ் தினத்துடன் யுத்த நிறுத்த முயற்சி

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் 'கிறிஸ்மஸ்' தினத்துடன் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவரும் முயற்சிகளில் சில அமைப்புக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனவாம்.
கிறிஸ்மஸ் தினத்திலிருந்து

[4-ம் பக்கம் பார்க்க]

## இராணுவ தளபதிகள் வடக்கே விஜயம்

(கொழும்பு)
வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கு, நேற்று முன்தினம் இராணுவ உயர் மட்டக் குழு ஒன்று திடீர் விஜயம் செய்துள்ளது.
இக்குழுவில் பாதுகாப்பு

[4-ம் பக்கம் பார்க்க]

## தெரிவுக்குழுவின் முடிவை சுதந்திரக்கட்சி எதிர்க்கும்?

(கொழும்பு)
நாடாளுமன்ற தெரிவுக் குழு முன்வைத்துள்ள இடைக்காலத் தீர்வுத் திட்டத்திற்கு சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.
அடுத்த வருட முற்பகுதியில் தேர்தல் ஒன்றைச் சந்திக்கும் நோக்கில் அரசு இப்பிரச்னைக்கு தீர்வாக ஒரு திட்டத்தை சிறினிவாசன் மூலம் சமர்ப்பித்து அதற்கு சிங்களக்கட்சிகளின் ஆதரவைப்பெற்று அவசர அவசரமாக இதனை சபாநாயகரிடம் சமர்ப்பித்திருப்பதாக

[4-ம் பக்கம் பார்க்க]

## கிராம சேவையாளர் பரீட்சைமுடிவு வெளியானது

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கிராம சேவையாளரை நியமனம் செய்வதற்கான பரீட்சையில் சித்தி அடைந்தவர்களின் பெயர்ப் பட்டியல், பரீட்சை

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திடையே கலகம் எந்நேரமும் ஏற்படலா !

(கொழும்பு)
இலங்கையில் இராணுவத்தினரிடையே பெரும் கலவரம் எந்த நேரத்திலும் ஏற்படக் கூடிய சாத்தியகூறுகள் அதிகரித்து வருவதாகச் 'சிங்களப் பத்திரிகை' ஒன்று கூறியுள்ளது.
அரசு இந்த யுத்தத்தைத் தொடர்ந்தும் இழுத்தடித்து வருவதால் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ள படையினர், இக்கலகத்தில் எந்த நேரத்திலும் ஈடுபடலாம் எனவும், அவ்வாறு அவர்கள் கலகத்தில் ஈடுபட்டாலும் அது ஆச்சரியப்படத்தக்கதல்ல எனவும் படை வட்டாரங்களை ஆதாரம் காட்டி, அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.
இதேவேளை அரசுக்கு எதி

[4-ம் பக்கம் பார்க்க]

## திருமலை கடலில் கடற்படை படகு மூழ்கியது

(கொழும்பு)
திருமலை உப்பாற்றில் கடற்படை படகொன்று மூழ்கியதில் அதில் சென்ற 2 கடற்படையினரும், 3 பொலிசாரும், 3 இராணுவத்தினரும் கடலில் மூழ்கியதாகவும் இதில் ஒரு கடற்படைவீரர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்

[4-ம் பக்கம் பார்க்க]

## தினமும் 3 சிப்பாய் முகாம்களில் தற்கொலை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் உள்ள படை முகாம்களில், தினமும் சராசரியாக 3 இராணுவச் சிப்பாய்கள் தற்கொலை செய்து வருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் பலர் தினமும் தங்களைத் தாங்களே காயப்படுத்திக்கொண்டு, யுத்தமுனைக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றார்களாம்.
அண்மைக் காலங்களில் படைத் தளபதிகள் பலர் உயிரிழந்ததை அடுத்தே, இவ்வாறான சம்பவங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளதாம். (சி)

## வடக்கு கிழக்கு இணைப்பை தொடர்ந்தால் தெரிவுக்குழுவிற்கு ஆதரவு

### தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)
வடக்கு கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பை சிறிது காலத்திற்கேனும் தொடர்வதற்கு அரசு இணக்கம் தெரிவிக்குமானால் தெரிவுக்குழுவின் முடிவுகளுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் அனுமதி தெரிவித்துள்ளார்.
அமைச்சர் தொண்டமான் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,
இனப்பிரச்னைக்கு தீர்வு

[2-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உர பாய்க்குகள், சாக்குகள் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு: செயலாளர், அறவழிப் போராட்டக்குழு. த பெ. இல. 2, கைதடி, நுணாவில், சாவகச்சேரி.
(ஏ-2702)

### நீம் தூபம் நுளம்பு விரட்டி

நுளம்புத் தொல்லையா? மலேரியா அச்சமா? இருக்கவே இருக்கிறது நீம் தூபம். இரவில் சாம்பிராணி போல் புகைத்து நுளம்பை விரட்டி விமோசனம் காணுங்கள். அண்ணா கோப்பிக்கடைகளிலும் கிடைக்கிறது "நீம் தூபம்". மில்க்வைற்
(ஏ-2704)

### அழகுசாதனப் பொருட்கள்

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள் மணப்பெண்களின் சோடனை நகைகள் தையல், பாடசாலை உபகரணங்கள், எவர்சில்வர், வெளிநாட்டு உள்நாட்டு அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை, 170, மின்சார நிலைய வீதி ஜெயா பென்ஸி ஹவுஸ், 160, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.
(சி-7087)

### ஆண்டு 6 அனுமதி ஆண்டு 5 புலமைப்பரிசில்

யாழ் மாவட்ட முன்னணிப் பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அனுமதிப் பரீட்சை (24-12-92) வியாழனும், ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 03-01-93 ஞாயிறும் முற்பகல் 8.00 மணிக்கு நடைபெறும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி 7088)

# யுத்த விமானக் கொள்வனவில் அரசு பல நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது

## — விமானப் படைக்குள்ளும் நெருக்கடி —

ஆர்ஜன்ரீனாவில் உற்பத்திசெய்யப்பட்ட தரையில் இருந்து தாக்கக்கூடிய விமானக் கொள்வனவு சம்பந்தமான பல கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. I-A-58-A புக்காரா விமானங்களை இலங்கை அரசு ஆர்யன்ரீனாவின் நிறுவனம் ஒன்றிடம் இருந்து கொள்வனவு செய்வதில் சர்ச்சை எழுந்துள்ளது. இவ் நிறுவனம் ஆகாயத்தில் தாக்குதலை மேற்கொள்ளும் ஆராய்ச்சியிலும் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளது. எப்படியிருந்தபோதிலும் ஆர்ஜன்ரீனாவின் விமானப் படையின் கட்டுப்பாட்டிலுள்ள 'Fama' நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் இந்நிலைப்பாட்டிலிருந்து திடீரென தனது திட்டத்தை மாற்றி தரைத் தாக்குதல் செய்யக்கூடிய ஆறு விமானங்களை கொள்வனவு செய்வதற்கும் மேலும் 4 மென்மையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விமானங்களையும் வாங்குவதற்கு முயற்சித்தபோதே பிரச்னை உருவாகியது.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இந் நிறுவனம் இக்குறிப்பிட்ட விமானங்களின் உற்பத்தியை 6 ஆண்டுகளின் முன்னே நிறுத்திவிட்டது. பாதுகாப்பு அமைச்சு ஆகஸ்ட் 24ம் திகதி உள்ளூர் வெளிநாடுகளிடமிருந்து கொள்வனவுக்காக 6 ரக விமானங்களுக்கான கேள்விகளை கோரியிருந்தது. இக்கேள்வி அரசாங்க கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகையொன்றில் பாதுகாப்பு அமைச்சினால் விளம்பரப்படுத்தப்பட்டது.

குறித்த விளம்பரத்தின் திகதிகள் இருமுறை பின்போடப்பட்டு இறுதியான கேள்விக்கான திகதி இவ்வாண்டு அக்டோபர் 6ந்திகதி திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

நீண்ட ஆய்வின் பின்னர் சிறீலங்கா அரசு பிரேஸில் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துர்க்கானோ' என்ற விமானத்தை தெரிவு செய்திருந்தது. இந்தரகம் தற்பொழுது உற்பத்திநிலையில் உள்ளது.

அத்துடன் துர்க்கானோ, எகிப்து ஈரான் ஆகிய நாடுகளிலுள்ள விமானப்படைகளினால் உபயோகிக்கப்பட்டு வருவதுடன் இது குறுகிய கால எல்லைக்குள் தரையிலிருந்து மேலே செல்லவும் தரையில் இறங்குவதற்கும் வல்லமையுடையது. மேலும் தயார் நிலையில் இல்லாத விமான ஓடு பாதைகளிலும் செல்லக்கூடியது.

எகிப்து அரசு முதலில் 40 துர்க்கானோ விமானங்களை கொள்வனவு செய்யத் தீர்மானித்தது. பின்னர் மேற்கத்திய நாடுகளிலிருந்து கூடுதலான விமானங்களை கொள்வனவு செய்தது. ஆர்ஜன்ரீனா, கொண்டூரஸ், ஈரான், பரகுவே, பெரு, வெனிசுலா போன்ற நாடுகளும் பிறேஸில் விமானங்களை உபயோகிக்கத் தொடங்கின.

தற்போது இவ்விமானங்களில் 500 சேவையிலுள்ளது. அரசு 'சுவிஸ்' நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பி. ஸி 7 ரெர்கபா ரெயினர் விமானங்கள் பற்றி விசாரணைகள் நடாத்தியபின்னர் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் ராணுவ குறியீடுகளை இவ்விமானங்கள் கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இறுதியாக ஆர்ஜன்டீனா தயாரிப்பான புக்காரா' விமானங்களை 11 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதனை பிரதமமந்திரியும் பாதுகாப்பு அமைச்சருமான டி. பி விஜயதுங்கா அண்மையில் தெரிவித்துள்ளார்.

ஆர்ஜன்டீனா விமானப்படை அதிகாரி இவ்விமானங்களுக்கு திருத்தங்கள் செய்வதற்கும் உதிரிப்பாகங்கள் வழங்குவதற்கும் உறுதியளித்துள்ளார். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி. குணரத்ன இவ் விமானக்கொள்வனவுபற்றி நாடாளுமன்றத்தில் பிரதமரை, அரசாங்கம் 4 விமானங்களை 70 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதா? என்ற கேள்வியை எழுப்பினர். ஆர்ஜன்ரீனா 'புக்காரா' ரக விமான உற்பத்தியை 1986ம் ஆண்டிலே நிறுத்திவிட்டது என்பதை அரசு ஏற்றுள்ளது. பல எதிர்ப்புகள் மத்தியிலே அரசாங்கத்திற்கும் ஆர்ஜன்ரீனாவுக்குமிடையிலான இவ் ஒப்பந்தம் கொழும்பில் நவம்பர் 19ம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

தற்போது உற்பத்தியில் இருக்கும் 'ரக்கா' விமானத்திற்கான கேள்வியே கோரப்பட்டிருந்தது. தரையில் தாக்க கூடிய விமானத்திற்கு கேள்வி கோரப்படவில்லையே என தெரிவிக்கப்பட்டுள்ளது. 'புக்காரா' விமானம் தற்பொழுது உற்பத்தியில் இல்லையென்று திரு. குணரத்ன கூறியது பிரதம மந்திரி நாடாளுமன்றத்தில் ஆர்ஜன்ரீனா அரசாங்கம் உற்பத்தியை நிறுத்திவிட்டது என்பதை உண்மைப்படுத்துகின்றது. (தொடரும்)

### இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக்கல்லூரியின் ஆண்டு நிறைவு விழாவும், ஆண்டுப் பொதுக்கூட்டமும், இன்று 22ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

### வடக்கு-கிழக்கு

[1-ம் பக்க தொடர்ச்சி]

காணப்படும் ஐ. தே. க, ஸ்ரீ. ல. சு. க, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும் மனம்மாறியிருப்பது வரவேற்கத்தக்கது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைக்கும் விதத்தில் மேற்படி கட்சிகளின் நிலைப்பாடு மாறவேண்டும். அந்தக்கட்சி இத்தகைய ஒரு இணைப்புக்கு சம்மதம் தெரிவிக்குமேயானால், தெரிவுக்குழுவின் முடிவுகளை நாம் ஆதரிப்போம்.

வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பு ஆகக்குறைந்தது இன்னும் ஒருவருடத்துக்காவது நீடிக்கப்படவேண்டும். இந்த இணைப்பின் அடிப்படையில் ஒரு தேர்தலை வைத்து இறுதித்தீர்வு ஒன்றைக்காண முடியும்.

அரசாங்கத் தரப்பிலிருந்து அமைச்சர் தொண்டமானுக்கு அண்மையில் நெருக்கடிகள் ஏற்பட்டதையடுத்தும், இ. தொ. கவில் பிரிவு ஏற்பட்டு அவரது தலைமைத்துவத்துக்கு ஒரு சவால் ஏற்பட்டதையும் அடுத்தே திரு. தொண்டமான் இனப்பிரச்னை விவகாரத்தில் ஒரு மென்போக்கைக் கடைப்பிடித்து இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# கிழக்கு மாகாணத்திலும் "சுப்பசொனிக்" தாக்கு

(கொழும்பு)

கிழக்கில் இடம்பெற்றுவரும் பல இராணுவ நடவடிக்கைகளில் ஒருகட்டமாக அங்கு 'சுப்பசொனிக்' விமானங்களும் பலஇடங்களில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

மூன்றுக்கும் மேற்பட்ட பொம்மர்களும், ஹெலிகளும் சுப்பசொனிக்குடன் இணைந்து தாக்குதலை நடாத்திவருகின்றனவாம்.

இதேவேளை காட்டுப்பகுதியில் நடவடிக்கையை மேற்கொண்டுவரும் படையினர் பன்றி வேட்டைக்குச் சென்ற இருவரையும், விவசாயி ஒருவரையும் சுட்டுக்கொன்றுள்ளனர். (சி)

# இராசி பலன்

**22-12-1992**

**(தமிழுக்கு மார்கழி 07)**

**செவ்வாய்க்கிழமை**

திரயோதசி காலை 6-41 வரை சதுர்த்தசி ஸைவக 6-17 வரை அனுஷம் பி. ப 2.11 வரை இராகுகாலம் மாலை 3-45 முதல் 4-55 வரை சுப நேரம் 10-55 முதல் 12-25 வரை.]

மேடம்: பிறர் வஞ்சனை மனஅமைதி குன்றல், அலைச்சல்.

இடபம்: தொழில் லாபம், காரியசித்தி, பகையை வெல்லுதல்.

மிதுனம்: உறவினர் நன்மை, தாய்ப்பாசம், மனச்சந்தோசம்.

கடகம்: அஞ்சி நடத்தல், வழித்தொல்லை, மனவெறுப்பு

சிங்கம்: பிறர் தலையீடு வீண் பழி, தப்பபிப்பிராயம்.

கன்னி: ஆரோக்கியகுறைவு தொழில் பழு, குடும்பசெலவு.

துலாம்: வருவாய் தடைப்படல், பிதாவுக்கு துன்டம், அவமதிப்பு.

விருச்சிகம்: புதிய முயற்சி, சுபகாரியம், உறவினர் உதவி.

தனுசு: உள்பகை, சொத்து விவகாரம், மனப்போராட்டம்.

மகரம்: இனம்புரியாத சோம்பல், நிர்வாகப்பதவி, பணவரவு

கும்பம்: மித்திரர் அபிமானம். வாக்குவன்மை, பயணம் கைகூடும்.

மீனம்: காரிய சுணக்கம், மந்தமான போக்கு, தொழில் நஷ்டம்.

— ஜோஸ்யர்

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்

# ஆதனவரி பற்றிய அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட, மேற்படி உப அலுவலகங்களின் எல்லைக்குள் வரும ஆதனங்களின் 1992ம் ஆண்டு 4ம் கந்தாயத்திற்கான வரிகளை 31-12-1992ந் திகதிக்கு முன்னர் செலுத்தி, பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் சகல வரியிறுப்பாளர்களும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி கால எல்லைக்குள் செலுத்தப்படாதவிடத்து, வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்களின் வரி விகிதங்களில் 15 வீதமும் சகல ஏனைய இடங்களின் வரி விகிதங்களில் 20 வீதமும் விருந்துச் செலவு அறவிடப்படும்.


ஆகவே, வரியிறுப்பாளர்கள் சகல நிலுவைகளையும் உரிய காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

செல்வி தனுஜா தணிகாசலம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 16-12-92.
(எ 2709)

## 36 வருட சேவைக்குப் பின் ஓய்வு பெறும் யா. கொழும்புத்துறை இ.ம. வி. அதிபரை

# வாழ்த்துகின்றோம்



**திரு. கா. கணேசதாசன்**

24-12-92ல் இவரது 61வது பிறந்ததினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை மேற்கு விநாயகராலயத்தில் வழிபாடும் வித்தியாலயத்தில் விருந்துபசாரமும் நடைபெறும்.

கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்றம்
(சி 7083)

# அமரர் ந. சபாரத்தினம் அவர்களின் நினைவு மலர்

அமரர் என். சபாரத்தினம் அவர்களை நான் எட்டு ஆண்டுகளுக்குமுன் முதல் தடவையாகச் சந்திக்குமுன் ஒருவரையொருவர் தெரியாதவர்களாயிருந்தபோதிலும் பத்திரிகை வாயிலாகவும், கடிதவாயிலாகவும் பல ஆண்டுகளாகத் தொடர்புகொண்டிருந்தோம்.

வருடத்தை நான் தவறுகக் குறிப்பிடிருந்தது திரு. சபாரத்தினம் அவர்களின் கடிதத்தின் வாயிலாகவே எனக்குத் தெரியவந்தது. இத்தவறை அவர் மிகப் பாரதூரமானதாகக் கருதியிருந்தார்.

1984 ம் ஆண்டு மே மாதம் 12 ம் திகதி பேராசிரியர் வித்தியானந்தனின் மணிவிழாவின்போது தான் எதிர் புடன் கூடிய கனிவும் அவரிடம் தெற்றெனத் தெரியநின்றன. இதுவே நான் அவரைச் சந்தித்த முதற் சந்தர்ப்பமும் கடைசிச் சந்தர்ப்பமுமாகும்.

நிரம்பிய தமிழறிவும், ஆங்கிலப் புலமையும், லத்தீன் மொழித் தேர்ச்சியும் ஒருங்கே கருத்துக்களை மிகவும் பூடக

## அரும்பணிகள் செய்தவர்

அவைகள் தோறும் அதி சிறந்த தலைவராக
வாழ்ந்தவர்
சபையினிக்க மொழிகள்பேசி சாந்தி நிலவச்
செய்தவர்
அசைந்து ஆடும் அம்பலவன் அடியை ஒற்றிப்
பணிந்தவர்
அறிவுலக மேதையாக அரும்பணிகள் செய்தவர்

— ஆ. கல்யாணசுந்தரேசன்

## நான் கண்ட பெரியார்


மற்றவர்களைக் காட்டிலும் இவரது கடிதங்களில் "Bouquets and Brickbats" என ஆங்கிலத்தில் கூறுவது போல் பாராட்டுக்களோடு கண்டனங்களும் மிகப் பூடகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் திகதி "சிலோன் டெய்லி நியூஸ்" பத்திரிகையில் "Reminiscences of a Statesman" என்ற தலைப்பில் சேர். பாராத விதமாகத் திரு சபாரத்தினம் அவர்களை நான் சந்தித்தேன். நான் என்னை அறிமுகப்படுத்தியபோது தன்னை அறியாமலே அப்பெரியார் இருக்கையைவிட்டெழுந்து என்னைக் கட்டித்தழுவினர். இதிலிருந்து அப்பெரியார் என்மேல் வைத்திருந்த அபிப்பிராயத்தை நான் முற்றாக உணர்ந்துகொண்டேன். அன்றைய "தினகரன்" பத்திரி

**நவாலியூர் நா. சச்சிதானந்தன்**

பொன்னம்பலம் இராமநாதனைப்பற்றி நான் எழுதியிருந்த கட்டுரையில் சுவாமி விவேகானந்தரவும், சேர். பொன்னம்பலம் இராமநாதனும் அமெரிக்காவில் உரையாற்றிய ஆண்டுகளைக் குறிப்பிடும்போது, சுவாமி விவேகானந்தா உரையாற்றிய கையில் பேராசிரியர் வித்தியானந்தனைப் பற்றி நான் எழுதிய கட்டுரையைப்பற்றிய அவரது அபிப்பிராயத்தை நேருக்குநேர் கேட்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

அறிவு முதிர்ச்சியால் ஏற்பட்ட அடக்கமும் கண்டிப்



மாக எடுத்துக்கூறும் ஆற்றலுமுடையவர்.

அவரது எழுத்துக்கள் தலைசிறந்த படைப்புக்கள் (masterpiece) ஆகும். அவை சுவடிக்காப்பகத்தில் (archives) பாதுகாக்கப்படவேண்டிய அருஞ்சொத்துக்களாகும்.

## ஆசிரிய உலகிற்கு பெரும் சேவையாற்றினர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனாகிய அமரர் ந. சபாரத்தினம் 1945-ம் ஆண்டு தொடக்கம் 1946-ம் ஆண்டு வரையும் பாடசாலை ஆசிரியராக கடமையாற்றினர். பின் தான் பிறந்த மண்ணான காரைநகரின் சேவைக்காக இந்துக்கல்லூரியின் கிளையுமான காரைநகர் இந்துக்கல்லூரியில் சிறந்த சேவை புரிந்தார்.

1962ல உபஅதிபராக யாழ். இந்துக்கல்லூரிக்கு வருகை தந்து 1964ல் அதிபராகப் பதவியேற்ருர். 1971ல் இளைப்பாறும்வரை இவர் கல்லூரிக்கு ஆற்றிய சேவை அளப்பரியது. இந்தக் காலத்தில் கல்லூரியின் தரமும் மதிப்பும் நாடு முழுக்க புகழ் பெற்றதுடன் விளையாட்டிலும் பல வெற்றிகளைக் குவித்தது.

இவர் சிறிது காலம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் சிறந்த சேவையாற்றினர்.

இதன்பின் 'ஈழநாடு' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகபதவியேற்று கடமையாற்றி சிறந்த சேவையாற்றினர். 'ஈழநாடு' வில் இவர் எழுதிய ஆசிரிய தலையங்கங்கள் தொகுக்கப்பட்டு 'ஊரடங்கு வாழ்வு' எனும் தொகுப்பு நூல் இந்தியாவில் வெளியிடப்பட்டதும் இதற்கு பெரும் வரவேற்பு கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

சில வருடங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த போதும் தமது இறுதிக் காலம் வரை தினமும் நூல்கள் படிப்பதிலும் கட்டுரைகள் எழுதுவதிலும் தமது நேரத்தை செலவழித்து வந்துள்ளார். அவர் தினமும் எழுதிவந்த கட்டுரைகளை பெற்று நூல் உருவில் வெளியிடுவதே அவருக்கும் கல்வி உலகிற்கும் செய்யும் கைமாறாகும்.

- ரி. சிவகணேசன்.

## ஒரு சகாப்தத்தின் முடிவு

இவர் ஆசிரியராகவே பிறந்தார்" என்று பேசப்படுவது ஒருசில வருடங்களாக அற்றுப்போய்விட்டது. காரணம் அப்படிப்பிறந்து தொண்டாற்றிய பரம்பரை அநேகமாக மறைந்துவிட்டது. என்று கல்விச்சிந்தனை உடையோர் கருதுதாகலாம். ஆசிரியர்கள் உருவாக்கப்படுகின்றுர்கள். என்பது உண்மைதான் ஆனல் நல்லாசிரியர்களின் உருவாக்கத்தின் பின்னணியில் ஒரு சக்தி இருந்திருக்கின்றது. இன்றும் இருந்துவருகின்றது என்பதை உணர்ந்து போற்ற ஒருவர் எம்மிடையே வாழ்ந்து வழிகாட்டினுர். இன்று அவர் இல்லை.

ஈழத்தில் கல்வித்துறை நிர்வாகத்துக்கும் கற்பித்தல் நெறிக்கும் வழிகாட்டி ஆசிரியர், மாணவர் நலன்காக்கும் பெரும் சக்தியாக அன்று விளங்கிய வடமாகாண ஆசிரிய சங்கம் (N. P. T. A) அகில இலங்கை ஆசிரியர் சங்கம் (A. C. U. T) ஆகியவற்றின் தனித்தன்மை தாங்கி ஈழத்து ஆசிரியர்களின் அறி

**க. சிவராமலிங்கம்**

இவர் ஆங்கிலமும், செந்தமிழும் இலத்தீனும், அறிவியலும் அருளியலும் வல்லவர் உருவத்தில் சிறியவராய் உள்ளத்தால் அதி உயர்ந்தவராய் செஞ்சொற் செல்வனய் ஆழமான கருத்துக்களை அவைக்குரிய தாக்கமான சொற்களால் வடிக்கவல்லவராய் நடமாடும் இலக்கியத் தென்றலாய் சிரிக்கச் சிரிக்கப் பேசி மகிழ்விக்கும் செம்மலாய் வாழ்ந்த அமரர் நமசிவாயம் சபாரத்தினம் தான். பிறந்த காரைநகருக்கும் கற்று கற்பித்த கலைக்கோட்டங்களுக்கும் புகழ் தேடித்தந்தவர். யாழ். பல்கலைக்கழக அவை வாற்றலை பிரித்தானியாவரை சென்று காட்டிய பெருமகன். இன்று இல்லை.

'ஈழநாடு' இதழின் ஆசிரியராக அமர்ந்து புகழ் ஈட்டிய களின் உறுப்பினராகவும் சேவை செய்தவர். இன்று தேவர் அவை சிறக்க அழைக்கப்பட்டார் போலும்!

ஒரு சகாப்தத்தின் முடிவு. இவர் மறைவு கல்வி உலகில் ஒரு வெறுமை......!

### சீஷெல்லில் நினைவு அஞ்சலி

(லண்டன்)

'ஈழநாடு' முன்னுள் ஆசிரியரும். யாழ். இந்துக் கல்லூரி முன்னுள் அதிபருமான அமரர்என். சபாரத்தினம் நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த மாதம் 27ம்திகதி சீஷெல் நாட்டில் நடைபெற்றது.

சீஷெல்ஸ் நவசக்திவிநாயகர்ஆலய மண்டபத்தில் திரு. சந்திரபாபு தலைமையில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் முன்னுள் அருணோதயாக் கல்லூரி அதிபர் வ. சிவசுப்பிரமணியம், முன்னுள்வடமாநில விஞ்ஞானக் கல்வி ஆலோசகர் திரு. அற்புதநாதன், முன்னுள் யாழ். சைவ பரிபாலசபை செயலாளர், 'இந்து சாதனம்' ஆசிரியர் திரு.வை. இரகுநாதமுதலியார், திருமதி சரோஜினி சிவசுப்பிரமணியம் திரு. இரத்தினசபாபதி ஆகியோர் உரையாற்றினர்கள்.

## கல்வி உலகின் கிரிதீபம்

கல்வி உலகில் கிரிதீபமாகப் பிரகாசித்த அமரர் ந. சபாரத்தினம் அவர்கள் தென்மராட்சியின் "காமதேனு" வாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியை உயர்த்த உதவிய அதிபர் என்பதை இளம் தலைமுறையினர் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

**ஆசிரியமணி**

**ஆர். ரி. சுப்பிரமணியம்**

இவ்அதிபர் தென்மராட்சியின் கலாசார அபிவிருத்திக்குத் தளமிட்டவர்களில் ஒருவர்.

ஆங்கிலத்தில் அதி அற்புத விவேகியாகிய இம்மாமேதை தனது மாணவர்களுக்கு பெரும் உந்துசக்தியாக விளங்கினர். ஆங்கில இலக்கியங்களில் ஆர்வத்தை தூண்டி பேச்சுக்கலையையும் எழுத்தாற்றலையும் வளர்த்தவர் பத்திரிகைத்துறையில் எம்போன்றவர்களைப் பரிமளிக்கச் செய்தவர்.

## சீரிய சிந்தனையாளர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி புகழ்பூத்த அதிபர்கள் பலரைப் பெற்று பெருமையடைந்துள்ளது. இவ்வரிசையில் திரு. நமசிவாயம் சபாரத்தினம் அவர்களின் நாமம். யாழ். இந்துவின் வரலாற்றில் நிலைத்து நிற்குமென்பதில் ஐயமில்லை.

இக்கல்லூரியின் மாணவனாகவும், ஆசிரியராகவும், உபஅதிபராகவும், அதிபராகவும் அவர் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். இவர் காலத்தில் இந்துக்கல்லூரியிலிருந்து, பல்கலைக்கழகத்திற்கு சென்ற மருத்துவ பொறியியல் மற்றும் பிற துறைகளைச் சார்ந்த மாணவரின் தொகை அதிகரிப்பதோடு சில வருடங்களில் அத்தொகையானது அகில இலங்கை ரீதியிலும் முதன்மை பெற்று பெருமை பெற்றது. அமரர் சபாரத்தினம் வெறும் அதிபராக மட்டும் இயங்கவில்லை. சிறந்த கல்விமானகவும், சீரிய சிந்தனையாளராகவும், பிரபல தொழிற்சங்க வாதியாகவும், பத்திரிகையாளனுவும், சமூக சேவையாளராகவும் விளங்கினுர்.

ஆரம்பத்தில் இளைஞர் காங்கிரஸில் சேர்ந்து மக்களுக்காகவும் உழைத்தார் இவர் காந்தியக் கொள்கையினலும் கவரப்பட்டு உழைத்தவராவார்.

வடமாகாண ஆசிரிய சங்கத்திலும், அதிபர் சங்கத்திலும் இவர் பணியாற்றிய காலம் பொற்காலமாகும். அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக ரோம் டெல்லி, லண்டன் போன்ற நகரங்களில் நடைபெற்றகருத்தரங்குகளிலெல்லாம் இவரது கருத்துக்கள் யாவும் பெரும் வரவேற்பைப் பெற்றன.

கல்வியாளராகவும், சிந்தனையாளராகவும் இவர் வெளியிட்ட கருத்துக்கள் மக்களை மட்டுமல்லாது கல்வியமைச்சையும் பெரிதும் ஈர்ந்தனவாகும். தாய்மொழிக் கல்வியோடு, நம்மவர் ஆங்கிலத்தின் தேவையையும் உணர வலியுறுத்தியவரும் இவரே. காலத்திற்குக்காலம் நாட்டின் கல்வியில் ஏற்பட்ட மாறுதல்களின் போதெல்லாம் இவர் சங்க ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் வெளியிட்ட கல்விச் சிந்தனைகள் யாவும் அரசின் கவனத்தைப் பெற்றன.

**வண்ணை. சே. சிவராசா**

சிறந்த எழுத்தாளனுகவும், பத்திரிகையாளனுகவும் விளங்கிய இவர், ஆங்கிலத்திலும், தமிழிலும் பேசுவதைப் போலவேஎழுதுவதிலும் வல்லவராவார். "தசிலோன் ரீச்சர்" சஞ்சிகையிலும் பின்பு "ஈழநாடு" தினசரியில் ஆசிரியராகவும் கடமை புரிந்தார்.

மொத்தத்தில் இவர் ஒரு ஆளுமைமிக்கத் தலைவராகவும், சீரிய சிந்தனையாளராகவும், பாரம்பரியத்தை மேவிநிர்வாகியாகவும் விளங்கினுர்

அமரர் சபாரத்தினம் அவர்களின் ஆன்மா பரம்பொருளாம் சிவபத நிழலில் துயில்கொள்ளட்டும்.

ஓம் சாந்தி

# ★ தெரிவுக்குழு முடிவுடன் இந்திய அதிகாரிகளை சந்திக்க

## பிரேமச்சந்திரன் புதுடில்லி பயணம்

## பெருமாளையும் சந்திப்பார்

(கொழும்பு)

இந்திய அரசின் பாதுகாப்பிலிருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் திரு. வரதராஜ பெருமாளை சந்திக்க கட்சியின் பதில் தலைவரும், யாழ். மாவட்ட எம். பி. யுமான திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த வாரம் இந்தியா சென்றுள்ளார்.

முதலில் சென்னை செல்லும் இவர் அங்கிருந்து புதுடில்லி சென்று திரு. வரதராஜப் பெருமாளை சந்திக்கவுள்ளாராம்.

இதேவேளை திரு. பிரேமச்சந்திரன், திரு ஸ்ரீநிவாசனின் 'சமஷ்டி' திட்ட அமுலாக்கல் குறித்தும் இந்திய உயரதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## சுந்தர் பயணம்

(யாழ்ப்பாணம்)

வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம், நேற்றுக் காலை க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை விடைத் தாள்களை எடுத்துக் கொண்டு கொழும்பு பயணமானார்.

இவர் நேற்றுக் காலை பருத்தித்துறை சென்று, அங்கிருந்து பலாலி வழியாகக் கொழும்புசென்றார். (157–159)

# தெரிவுக்குழு இறுதி முடிவு பெப்ரவரி வெளியாகும்

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வு குறித்து நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் தனதுஇடைக்கால அறிக்கையை தெரிவுக்குழு சபாநாயகரிடம் சமர்ப்பித்திருந்தது.

இதேவேளை தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டம் ஜனவரி மாதம் 16ம் திகதி நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## ரஷ்ய ஆயுதங்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை வாங்கவுள்ளது.

மேலும் யுத்த டாங்கிகளையும் பல்வேறு ரகமான ஆயுதங்களையும் ரஷ்யா வழங்க உள்ளதாம். (சி)

# இனப்பிரச்னைத் தீர்விற்கு றெனி புதிய திட்டம்

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் றெனி டீமெல் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்திக்கும் போது, இனப் பிரச்னைக்கான சமாதானத் தீர்வை முன் வைக்கவுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

தான் கொலைகளை ஆதரிப்பதில்லை என்றும், சமாதானத்தை விரும்புவன் என்பதால் ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வு தம்மிடம் உள்ளது என்றும் கூறினார்.

விரைவில் ஜனாதிபதியைத் தாம் சந்திக்ககூடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சு)

## திருமலைக் கடல்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

விபத்தில் இப்படகு சிக்கிய போதே இவர்கள் கடலில் மூழ்கினராம். உயிரிழந்த கடற்படை வீரரின் 'ரி-56' ரைபிளும் அதற்கான மகஸின்களும் கடலில் மூழ்கிவிட்டது. (சி)

## ராணுவ தளபதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா, வடபகுதி இராணுவத் தளபதி பிரிகேடியர் ஜானகன் தழுவத்த, கடற்படைக் கொமடோர் அதிகாரி திசநாயக்கா உட்பட மற்றும் பல இராணுவ அதிகாரிகளும் அங்கம் வகித்தனர்.

இவர்கள் வடபகுதியிலுள்ள வவுனியா, ஆனையிறவு, பலாலி, காரைநகர், மன்னார் முகாம்களுக்கு விஜயம் செய்தனர். (வி)

# இலங்கை பொலிஸ் படை நவீனமயமாகும்

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸாரின் தரத்தை யப்பான், பிரிட்டன் பொலிஸாரின் தரத்திற்கு உயர்த்த பொலிஸ் திணைக்களம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பொலிஸாருக்கு நவீன ஆயுதங்களும், நவீன தொலைத் தொடர்பு சாதனங்களும், தொழில்நுட்ப வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது புதிதாக பொலிஸில் சேர்க்கப்படுவோருக்கும், தற்போது கடமை புரிவோருக்கும் இந்த பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தற்போது 150 சப்-இன்ஸ்பெக்டர்கள் இப்பயிற்சியைப் பெறுகிறார்கள். பொலிஸாருக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், ஆசிரியர்களுக்கான விரிவுரையாளர்களும் பயிற்சி வழங்கவுள்ளனராம். (சி)

# வெளிநாட்டு நிறுவனங்கள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு 'சுதந்திர வர்த்தக வலயத்தில்' முதலீடு செய்துள்ள பல வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் வியாபார ஸ்தாபனங்களை மூடவுள்ளதாக எச்சரித்துள்ளன.

இங்கு தொழில் புரியும் ஊழியர்கள் மேற்கொண்டு வரும் பல போராட்டங்களையடுத்து பெரும் பாலும் இவ் வலயத்தில் அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளதாம்.

இதனால் தங்கள் முதலீடுகளை வாபஸ் பெற்று தமது தொழில் நிறுவனங்களை மூடிவிட அவை ஆலோசித்து வருகின்றனவாம் இதையடுத்து சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்க அரசு முடிவுசெய்துள்ளதாம்.

## நரசிம்மராவ் மீதான

# நம்பிக்கையில்லா பிரேரணை நேற்று தோல்வியுற்றது

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக பாரதிய ஜனதா கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று லோக சபையில் தோல்வி அடைந்தது.

பி. ஜே. பி. கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் கடந்த 17-ம் திகதி அரசுக்கு எதிராக கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் கடந்த மூன்று நாட்களாக பெரும் கூச்சல் குழப்பத்துடன் நடைபெற்றது.

இப்பிரேரணை மீது நேற்று லோகசபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஆதரவாக 106 வாக்குகளும் எதிராக 334 வாக்குகளும் கிடைத்தன. 47 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. (வி)

# ★ தெரிவுக்குழு விவகாரம்: தொண்டா – செல்லச்சாமி கருத்து முரண்பாடு

(கொழும்பு)

இ. தொ. கா. தலைவர் அமைச்சர் திரு. தொண்டமானுக்கும், அதன் பிரதி தலைவர் அமைச்சர் திரு செல்லச்சாமிக்குமிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தெரிவுக்குழு சமர்ப்பித்துள்ள தனித்தனி மாகாண சபைத்திட்டத்தைக் கடுமையாகக் கண்டித்து அதனை அமைச்சர் தொண்டமான் எதிர்த்து வருகிறார்.

ஆனால் இவ்விடயத்தில் சமாளித்து போகலாமென்ற நிலைப்பாட்டை திரு. செல்லச்சாமி கொண்டுள்ளதால் இருவருக்குமிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## யுத்த நிறுத்தம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சுக்களை நடத்தவுள்ளாராம்.

இதன்போது 'நாடாளுமன்றத் தெரிவுக் குழு' அண்மையில் சபாநாயகரிடம் சமர்ப்பித்த சிறிநிவாசனின் 'சமஷ்டித் திட்டம்' குறித்து அமைச்சர் ஹமீத் திலகருக்கு விளக்குவார்.

இதேவேளை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தமிழ் அரசியல்வாதி ஒருவரும், லண்டனில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவதற்காக லண்டன் சென்றுள்ளாராம்.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதமளவில் நடைபெறலாம் எனஎதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலுடன், தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கும் தொடர்பு உண்டெனவும் அச் செய்திகள் கூறியுள்ளன.

தற்போதைய சமாதான முயற்சி மூலம் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் 'யுத்த நிறுத்தம்' ஒன்று ஏற்படுமானால் சமாதான பேச்சுக்களையும், யுத்த நிறுத்தத்தையும் ஏப்ரல் மாதமளவில் நடைபெறலாமென எதிர்பார்க்கப் படும் ஜனாதிபதித் தேர்தல் காலம் வரையும் அல்லது அதற்கு அப்பாலும் தொடர்வதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவாம்.

இவ்வாறான முயற்சிகள் நடைபெறும் போது விடுதலைப் புலிகள் சமரசப் பேச்சு வார்த்தைக்காக ஆயுதங்களை ஒப்படைக்காமல் அதேவேளை ஆயுதங்களை பாவிக்காது இருக்க வேண்டுமெனவும் உடன்பாடு காணப்பட்டுள்ளதாம்

இவ்வாறான ஏற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் அரசியல்வாதி ஒருவர் மேற்கொண்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. (சி)

## மேஜர் ஆசிர் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

மன்னார் நானாட்டான் பகுதி இராணுவ காவலரண்கள் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் படுகாயமடைந்த மேஜர் ஆசிர் நேற்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

திருகோணமலை கல்லூரி வீதியைச் சேர்ந்த மேஜர் ஆசிர் (கணேசபிள்ளை ராஜகுலசிங்கம்) ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

இவரின் புகழுடம்பு இன்று காலை 7-30 மணிமுதல் 8-30 மணிவரை அரியாலை லெப். செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். (வி-155)

## தெரிவுக்குழுவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் பல கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

சுதந்திரக்கட்சியின் இனவாதப் பிரிவான 'ஹெலஉறுமய' இதனை எதிர்ப்பதுடன், ம. ஐ. மு. தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தனவும் அரசு அவசரமாக மேற்கொண்ட இந்தமுடிவைஎதிர்த்துள்ளார்.

தனது திட்டத்தைப் பின்தள்ளி சிறிநிவாசனின் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் மூலம் இடைக்கால அறிக்கை ஒன்றினை தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் 45 உறுப்பினர்களின் கையெழுத்தின்றி சபாநாயகரிடம் சமர்ப்பித்தது குறித்து எல் எஸ். எஸ். பி. எம் பி திரு. அத்தாவுட செனிவிரத்ன கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். (சி)

## 1990 ஜூனுக்குப் பின்னர்

# 612 பொலிஸார் காணாமல் போய்விட்டனர்

(கொழும்பு)

நாட்டில் இடம் பெற்று வரும் வன்முறைகளினால் 612 பொலிஸார் பற்றிய விபரங்கள் எதுவும் பெறமுடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

1990 ஜூன்மாதத்திற்குபின்னர் யுத்தம் ஆரம்பித்தபோது 1082 பொலிஸார் காணாமல் போயிருந்தனர் என்றும் இவர்களில் 310 பேர் இறந்துவிட்டதாகவும் 40 பேர் புலிகளின் பாதுகாப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது மேலும் 610 பொலிஸாரின் விபரம் பற்றி அறியமுடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## கிறிஸ்மஸ்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

புது வருடப் பிறப்பு வரையிலும் அல்லது அதற்குப் பின்னரும் இந்த யுத்த நிறுத்தத்தைத் தொடரும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ்வாறான ஒரு முயற்சிக்குப் புலிகள் ஆதரவளிப்பார்கள் எனவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (சி)

## கிராம சேவையாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளரால் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் டலர் சித்தி அடைந்துள்ள போதிலும், யாழ். மாவட்டத்தில் 30-11-92ல் உள்ள வெற்றிடங்களின்படியே முன்னுரிமை அடிப்படையில் இவை நிரப்பப்பட உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் உடனடியாகச் சித்தி அடைந்த சகலருக்கும் நியமனம் வழங்கப் படமாட்டாது எனத் தெரிய வருகிறது.

சித்தி அடைந்தவர்களின் பெயர் விபரங்களை 'ஈழநாடு' அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம். (157-71-158-சு)

## 320 பயணிகள் விபத்தில் பலி

(லண்டன்)

போர்த்துக்கலின் தென்பகுதியில், நெதர்லாந்து விமானம் ஒன்று கடும் மழை புயல் காரணமாகத் தரையிறங்க முயன்றபோது விமானம் தீப்பிடித்துக் கொண்டதனால் இதில் பயணம் செய்த 340 பயணிகளில் 320 பேர் வரை பலியாகிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## இராணுவத்திடையே

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராகப் புரட்சியில் இராணுவத்தை ஈடுபடச் சேரும் பல ஆலோசனைகளைப் பல சிங்கள பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றனவாம். (சி)

## இலங்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடை எதனையும் பிரான்ஸ் உத்தியோக பூர்வமாகவோ, உத்தியோகப் பற்றற்ற விதத்திலோ போடவில்லை என கூறப்பட்டதாம்.

ஆயுத விற்பனை குறித்து பிரான்ஸில் அரசு சார்பு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் அனுமதியின் பின்பே எந்த நிறுவனமும் வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய முடியுமென தூதரக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை பிரான்ஸை சேர்ந்த எந்தவொரு நிறுவனமும் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பது குறித்து அனுமதி கோரவில்லை எனவும் கூறினார். (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/3